முருகப்பெருமான் துணை

**மகான் பாம்பாட்டிச்சித்தர் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

17.05.2022, செவ்வாய்கிழமை

1. அண்ணலே ஞானச் சுடரே
அவதார ஆறுமுக ஞானியே
மண்ணுலகை காக்க வந்த
மாதவராசனே ஞான தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் அருளாசி தன்னை
ஆசிபட சுபகிருது விடை திங்கள்
அறிவிப்பேன் சூல திகதி குசன் வாரம்
(சுபகிருது வருடம் வைகாசி மாதம் 03 ம் நாள், 17.05.2022 செவ்வாய்கிழமை)
3. வாரமதில் பாம்பாட்டிச்சித்தர் யானும்
வழங்குவேன் உலகநலம் பெற
சோரமில்லா மக்கள் படைகள்
சுத்தநெறி கொண்டு அமைய
4. அமையவே ஞானம்தனை அருளி
அன்னதான சேவை மார்க்கம்
அமைத்துமே வழிநடத்துகின்ற
அரங்க ஞானி உண்மை வழிகளை
5. வழிகளை உலகோர் பின்பற்றி
வல்லமைபட தொடர்ந்துவர
தெளிவுதிடம் தேக மனோ பலம்
தெய்வபலமாகக் கூடி இனிதே
6. இனிதே உலகோர் ஞானவான்களாகி
எல்லா வகை திடமும் அடைவர்
கனிவேலன் சக்தி பலமுமாக
காக்கும் மகா சூட்சும வடிவாக
7. ஆகவே அற்புதம் நிகழ்த்த
அவதரித்த அரங்க ஞானி
வகைபட செய்து வருகின்ற
வளம்தரும் முழுமதி பூசை தன்னை
8. தன்னையே சர்வசக்தி தரும்
தவபலம் தரும பலம்தரும்
சண்முகனார் பூசையாக ஏற்று
சகலரும் கலந்து ஆசிபெற
9. ஆசிபெற வினைகள் விலகும்
ஆத்ம ஞான சூட்சுமமும்
வாசிவசம் சர்வ யோகமும்
வல்லமையும் கூடி சிறப்பர்

10. சிறப்புதரும் ஞான பூமிதனை
சித்திகள் பல தந்து அருளுகின்ற
மறுப்பில்லா வரங்களை கொண்டு
மகா ஞானி படைக்க இருக்க

11. இருக்கவே அரங்கன் திருவடி
இணையில்லா ஞானத் திருவடி
கருத்தாகப் பற்றி வருகவே
கடைத்தேற்றம் பெறுவது உலகோர் உறுதி

அருளாசி முற்றே

–சுபம்–